இது மேலெழுந்தவாரியாகப் பார்க்கும்போது உரிமை மீறல் நிகழ்ச்சியாக இருப்பதால் இதை தலைவர் அவர்கள் உரிமைக் குழுவிற்கு அனுப்பி வைக்கும்படி வேண்டிக்கொள்கிறேன் ”.

உறுப்பினர் முன்னறிவிப்பில் சொல்லியவாறு நாத்திக நாளேட்டில் இந்த அவை நடவடிக்கைக் குறிப்பிலிருந்து நீக்கப்பட்ட பகுதி கட்டமிட்டு பிரசுரிக்கப்பட்டுள்ளது. இந்த அவை நடவடிக்கைக் குறிப்பிலிருந்து நீக்கப் பட்ட பகுதிகள் பிரசுரிக்கப்படக் கூடாது. அவ்வாறு பிரசுரித்தால், அது இந்த அவையின் உரிமையை மீறுவதாகும்.

இப்பிரச்சினை மீது முடிவெடுப்பதற்கு முன்பு பத்திரிகையின் ஆசிரிய ரையும் அதைப் பிரசுரித்தவரையும் விளக்கம் கேட்டு, அவர்கள் அளிக்கும் விளக்கத்திற்குப்பின் இந்த பிரச்சினையை மேலும் பரிசீலிக்கலாமென்று கருதுகிறேன். அதன்படி ஆசிரியரையும் அதைப் பிரசுரித்தவரையும் விளக்கம் கேட்ட பின் அவையில் அறிவிப்பேன்.

3. ஒத்திவைப்புத் தீர்மானம்.

வேலூர் சி.எம்.சி. மருத்துவ மனையில் வேலைநிறுத்தம் குறித்து.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : திரு. டி. சந்தோஷம் அவர்கள் சி.எம்.சி. மருத்துவமனைப் பற்றி ஒத்திவைப்புத் தீர்மானத்திற்கு முன்னறிவிப்பு கொடுத்துள்ளார்கள்.

Negotiations are going on. It may be taken up after 21st March.

4. அறிவிப்பு

அலுவல் ஆய்வுக் குழுவின் முடிவு குறித்து

Mr. CHAIRMAN: At a meeting of the Business Advisory Committee held at 3-30 p.m. to-day, the following revised programme of business has been decided:

12—3—1975 to 21—3—1975 } No meeting.